

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (07.06.2016) நடைபெற்ற வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்ச்சியில் பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

செ.வெ.எண். 335/2015 நாள்:07.06.2016

**கன்னியாகுமரி மாவட்டம்**
**வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்ச்சியில் பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான், இ.ஆ.ப., அவர்கள் துறை அலுவலர்களுக்கு உத்தரவு.**

ஒவ்வொரு ஆண்டும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டங்களுக்குட்பட்ட கிராம கணக்குகளை சரிபார்க்கும் நிகழ்ச்சியான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) இன்று (07.06.2016) தொடங்கப்பட்டு 16.06.2016 வரை நடைபெறுகிறது.

அதனடிப்படையில் கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் இன்று (07.06.2015) வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கி தெரிவித்ததாவது:-

தமிழக அரசின் ஆணையின்படி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நான்கு வட்டத்திலும் வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நிகழ்ச்சி இன்று (07.06.2016) தொடங்கப்பட்டு வருகிற 16.06.2016 வரை நடைபெற உள்ளது. இந்த சிறப்பு முகாமில் கிராமக் கணக்குகள் மற்றும் பதிவேடுகள் சரிபார்க்கப்படுவதுடன் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெறப்பட்டு, அந்த மனுக்களின் மீது தனிக்கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதன்படி தக்கலை குறுவட்டம், முத்தலகுறிச்சி, கல்குளம், சடையமங்கலம், பத்மநாபபுரம் ``ஏ'' மற்றும் "பி", கோதநல்லூர், குமாரபுரம் மற்றும் வேளிமலை ஆகிய கிராம பகுதி மக்களிடமிருந்து 600 மனுக்கள் பெறப்பட்டது. இதில் மாதந்தோறும் ரூ.1000/- பெறுவதற்கான 544 மனுக்களும், பிற துறையை சார்ந்த 56 மனுக்களும் பெறப்பட்டது என தெரிவித்தார்.

மேலும் அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்கு மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஜமாபந்தி நிகழ்ச்சியில் நாகர்கோவில் வடக்கு மற்றும் தெற்கு, வடிவீஸ்வரம், கிழக்கு, வடக்கு மற்றும் தெற்கு நகரங்களுக்கும், வேம்பனூர் மேற்கு மற்றும் கிழக்கு, தேரேகால்புதூர் ஆகிய கிராம பகுதி மக்களிடமிருந்து 167 மனுக்கள் பெறப்பட்டது.

தோவாளை வட்டத்திற்கு நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் திரு. ச. மதியழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஜமாபந்தி நிகழ்ச்சியில் வீரமார்த்தாண்டன்புதூர், தோவாளை, ஆரல்வாய்மொழி வடக்கு மற்றும் தெற்கு, குமாரபுரம், செண்பகராமன்புதூர், மாதவலாயம், சண்முகபுரம் மற்றும் திருப்பதிசாரம் ஆகிய கிராம பகுதி மக்களிடமிருந்து 75 மனுக்களும், விளவங்கோடு வட்டத்திற்கு சார் ஆட்சியர் திருமதி. ஸ்ரேயா பி.சிங் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஜமாபந்தி நிகழ்ச்சியில் கொல்லங்கோடு "ஏ" மற்றும் "பி", சூழால், குளப்புரம், அதங்கோடு, ஆறுதேசம் மற்றும் முஞ்சிறை ஆகிய கிராம பகுதி மக்களிடமிருந்து 611 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டதுடன், கிராம கணக்குகள் மற்றும் பதிவேடுகள் சரிபார்க்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர் திரு. பி.வி. சரவணன், மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி. டி. சின்னம்மாள், இணை இயக்குநர் (வேளாண்மை துறை) திரு. சந்திரசானன் நாயர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், வட்டாட்சியர் திரு. ஒய். குமாரதாஸ், வட்ட வழங்கல் அலுவலர் (கல்குளம்) திரு. சந்திரசேகர் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.